# மகத்தான பதவி—மாருத மனம்!


Phone No. 4502 — Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. — MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (7—10—49) வெளியீடு (8—10—49) [ இதழ் 59


## மனுவின் புகழ் பரப்பும் மகாநுபாவர்!

## முற்போக்கையும் பகர்வார்— மூட மதியையும் பாதுகாப்பார்!

## மனிதாபிமானமும் இல்லை— முன்னேற்றத்தில் பற்றுமில்லை!

### விசித்திரமான வேஷம்— விஷமத்தனமான வம்பளப்பு!

—(0)—

### கவர்னர்-ஜெனரலின் பதவியும் பேச்சும்

"மனு நீதியின் உண்மைப்பொருள்படி நீங்கள்தான் பிரம்மகுலம். வெற்றுநூல் பூண்டவர்கள் அல்ல."

"பிரம்மகுலத்தின் தர்மத்தை மறவாமல் நடந்துகொள்வீர்களாக."

கல்லறையிலிருந்து, மனுவின் எலும்புத்தூள் கிளப்பிய குரல் அல்ல இது. மகத்தானப் பொறுப்பில் இருக்கும் 'இந்திய மகேஸ்வர'ரிடமிருந்து எழுந்த இன்னல்தரும் வாசகம் இது.

'எங்கே மனுவிருக்கிறார், மனு போதித்த தர்மந்தான் எங்கே அமுலில் இருக்கிறது, துவேஷம் கொண்டு தூற்றித் திரிகிறார்கள் இக்கபவர்கள்' என்று நம்மை, நாம் இதுபற்றிச் சிலபல கூறுகின்றபொழுது கண்டிக்கிறார்களே, அவர்களுக்கு, இந்தக் கேட்டாலே கொல்லும் பெருநஞ்சை அர்ப்பணம் செய்கிறோம் ஆராய்ந்துபார்த்து, மனு மறைந்தாலும், மனு நீதிமுறை முழுதும் நடைமுறையில் இல்லாமற்போனாலும், மனு சிலரின் மனக்கோயிலிலே, இன்னமும், குடியிருந்துகொண்டுதான் இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ளட்டும்.

'மக்களுக்குள்ளே ஜாதிபூசல்களைக் கிளப்பிவிடுகிறார்கள், ஜாதித்துவேஷத் தீயை மூட்டுகிறார்கள், சட்டவிரோதமானச் சண்டாளத்தனம் புரிகிறார்கள், விடாதீர்கள் இந்தப் புல்லர்களை, தண்டனைத் தாருங்கள் இந்த வகுப்புவாதிகளுக்கு' என்று நம்மைப்பற்றித் தூற்றிக்கொண்டும், சர்க்காருக்கு தூபமிட்டுக்கொண்டும் திரியும் திருமேனிகளுக்கு, இதனைச் சமர்ப்பிக்கிறோம், நீதி வழங்கட்டும், நேர்மைத் திறம் தெரிந்தவர்களாக இருந்தால்.

உண்மையான வகுப்புத்துவேஷத்தை நாம் எடுத்துக்காட்டும் பொழுது, அடுக்குமா எல்லாத் துறைகளிலும் எம்மவரை ஒடுக்கிவருவது என்று நாம் சரி நீதிக்குப் போர் தொடுக்கும் போது, பேனாப்பிடிக்கப் பெருந்தகையாளர்களில் சிலர், நம்மீது வசைமாரிகளைப் பொழிவது கண்டு, பொறுப்புள்ளவர்கள வழக்குத்தொடுத்தால், 'எழுத்துத் துவேஷப் பிரசாரத்திற்குப் பதில்கூறவே பணிபுரிந்தார் இச்சிறந்தவர் — குற்றவாளி என இவரைக் கூறுவதற்கு மனம் கூசுகிறது-மீண்டும முன் கைவரிசையைக் காட்ட உரிமையளிக்கிறோம்-வாய்செத்தப் பூச்சிகளே எச்சரிக்கையாக நடங்கள்!' என்று நீதியும் கிடைக்கிறது நிந்தனையும் கிடைக்கிறது. மனுவும் மாந்தாதாவும், வியாசரும் பராசரும், என்றோ தூவிய விஷவித்து, முளைத்து விருட்சமாகி, பட்டுப்போன நிலைபெற்றும், நாட்டிலே உள்ள மனிதாபிமானிகள் சிலர், — பட்ட மரம் துளிர்க்குமா என்ற தாவர நூல் அறிவும் இல்லாமல்—பட்டுபபோன விஷ விருட்சத்திற்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கும் விபரீதத்தில் ஈடுபட்டுள்ளனர்! 'இது, விவேகமா, வேண்டப்படும் செயலா, இப்பணிபுரிவது ஏற்குமா, இன்னும் எத்தனைகாலத்துக்குத்தான் இவ்வவமானத்தைத் தாங்கித் திரிவது' என்றுகொந்தமனத்தினராய், வகுப்பு நீதி கோரினால், எங்களின் போககிற்கு எது மூலகாரணமாக இருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்து. அதனை அறவே அழிக்க முனைவாது, நீதி கேழ்க்கும் எங்களை, கொலையினும் கொடியவர் என்று குற்றஞ்சாட்டி, எங்களைத் தண்டிக்க சட்ட நூற் புலமையைக் காட்டினால், 'நீதி'யை நிலைநாட்டிவிட்டதாகாது. ஓர் குலத்துக்கொரு நீதி கூறிய மனுவின் பூதவுடல் மறைந்துவிட்டிருந்தபோதிலும், 'மனுவின் பார்வை— மனுவின் உணர்ச்சி' இன்னும், இன்றும் செத்து மடிந்துவிடவில்லை என்றுதான் அருத்தப்படும்.

கவர்னர் ஜெனரலாக இருக்கின்ற ஆச்சாரியார் மனத்திலிருந்து மனு மறையவில்லை. மனுவின் உணர்ச்சிக்கு, மனுவின் பார்வைக்கு அவர் அடிமையாகிவிட்டிருக்கிறார். காவசைக்கிறார் அதன்வழி.

மனு வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டு, அந்தக்காலத்திலே இருந்த மக்களின் பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தன, அதற்கேற்பத்தான் நீதிமுறை வகுத்துள்ளாரா மனு, அதே காலத்தில மற்ற நாடுகளில் இருந்த நீதிநூல் ஆசிரியர்களின் போக்கு எவ்வாறு இருந்தது, மனுமுறைக்கும் மற்றவர்கள் முறைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை எவை எவை, என்பதுபோன்ற நூண்ஆய்வு அல்ல ஆச்சாரியார் நடத்துவது அத்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

## உழைக்காமல் உல்லாசியாகும் உலுத்தர்கள் வேண்டாம்

### உடலுழைப்பு கட்டாயமாக வேண்டும்

"ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்; உழைப்பின்றி உண்பவன் உலுத்தன்; நாட்டுக்குத் துரோகி; சமுதாயத்தின் பெருஞ் சுமை" என்று சோவியத் ரஷ்யா திட்டமிட்டு, அந்நாட்டிலே ஒவ்வொருவரும ஒவ்வொருவகை வேலையை மேற்கொண்டிருககின்றனர். அந்நாடு முன்னேற்றப் பாதையில் முன்னணி பெற்று விளஙகுகிறது.

ஜப்பானியர் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து வாழ்க்கை நடத்துவதென்னும குறிக்கோளுடன் வாழ்கின்றனர். அந்நாடு முன்னேற்றப் பாதையில் இருக்கிறது.

ஆனால் நம் நாட்டிலோ உழைக்காமல், பிறர் உழைப்பையும திறமையையும் பயன் படுத்தி, பிறரைச்சுரண்டி, பிறரிடம் விலஙகுகளினும்கேவலமாக வேலைவாஙகித் தஙகள் அளவில் உல்லாச வாழ்வு வாழும பேர்வழிகள பலர் இருககின்றனர். இன்று இஙகுள்ள முதலாளிவர்க்கத்தினர் மட்டுமல்ல, பல சில்லறைப் பேர்வழிகள், மிராசுதார்கள், நிலசுவான்கள, சிறு தொழிற்சாலைகளை வைத்து நடத்துவோர், வியாபாரிகள இன்னோரன்ன பிறர் அனைவரும்; பிறர் உழைக்க, தஙகள் உடல் நோகாமல் பொருள் திரட்டுவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கின்றனர்.

இந்த நிலை நாட்டைவிட்டகறறப்பட்டு, அனைவருககும் உடலுழைப்பு இருக்குமாறு செய்ய அரசாஙகம முயன்றால், அது பெரிதும பாராட்டி வரவேற்கப்படவேண்டியதேயாகும்.

"ஒவ்வோர் இந்தியனும் சாதாரண உடலுழைப்பு சம்மந்தப்பட்ட ஏதாவதொரு வேலையைச செய்ய வேண்டும, என வற்புறுத்தும் கட்டாயச சேவை முறை ஒன்றை நடைமுறையில் கொண்டுவர வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதனால், மககளின் மன, உடல் நிலை சரியானபடி இருககும. நாட்டுக்கும் இதனால் நன்மை எறபடும்"

என்று இந்தியாவின் முதலமைசசர் புதுடில்லிப் பேசசினூடே கூறியுள்ளார்.

இந்த நாட்டிலே உழைப்பில்லாமல் உண்டு கொழுத்து வாழும பெருமக்களை உழைகக வைகக முயலும முதலமைசசர், அவர்களை அடககிக கள்ளமார்க்கெட் வேலை செய்யாதிருக்குமாறு தடை செய்ய முடிந்ததா? முதலாளிகள் போக்கைக கண்டித்து, நாட்டு நலனுககான வழியில் அவர்கள் எண்ணத்தை மாற்ற முடிந்ததா? இதுவே முடியவில்லை என்றால், அவர்களை இத்துறைகளிலேயே பணியவைக்கமுடியவில்லைஎன்றால், உடலால் உழைககுமாறு அவர்களை வற்புறுத்த அரசாஙகத்திற்கு முடியுமா? எண்ணித்துணிக கருமம என்பது தமிழ்நாட்டின்கொள்கை. ஆனால், சொல்லியபடி செய்வது என்பது மரபில் இல்லாத வழக்கம் என்னும் காஙகிரஸ் முறைப்படி, முதலமைசசரும் கேட்போர் மகிழுமாறு பேசசுககாக இப்படிக கூறியிருந்தால், மனித சமுதாயத்துக்குத் தீமை விளைக்கும் செயல்களில் இதைவிடப்பெரியது வேறொன்றும் இருக்க முடியாது. எனவே, முதலமைசசர் தாம் சொல்லியதைச் செயலில் நிறைவேற்றிவைக்க உடனடியான முயற்சிகளையும் ஏற்பாடுகளையும செய்து, நெஞ்சுரத்துடன் இத்துறையில் பணியாற்றிப் பயன்பெற வேண்டுகிறோம்.

## கண் கெட்ட பின்னர்!

"ஆரம்பத்திலிருந்தே குழந்தைகள பிரதேச பாஷைகளைக கற்றுக்கொள்ளுகிறார்கள. செகண்டரி கட்டததில அவாகள் ஹிந்தியையும் ஆங்கிலத்தையும கறகவேண்டி இருக்கிறது. ஒரே சமயத்தில் இரு பாஷைகளைக குழந்தைகள படிபபது கஷ்டமாகும. முறறிலும் ஒன்றோடொன்று மாறுபட்ட இரு பாஷைகளைக் குழநதைகளைக கறகச்சொல்லுவது அவர்கள மீது பெரும பளுவைச் சுமததுவதாகும. ஆஙகிலததிற்கு அதிக முககியததுவம அளிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்தால ஹிநதியைச் சிறிதுகாலத்துககு ஒத்திவைபபதே நலம்."

—அவிநாசிலிங்கம்.

## உழக்குக்குள்ளே :: :: கிழக்கு மேற்கு!

—(0)—

### இலங்கைத் தீவில் ஒரு சுதந்திரத் தமிழ்நாடு?

இலங்கையில் இபபொழுது 7 லட்சம் தமிழாகள் உளளனர். இவர்கள் நீணடகாலமாக இலங்கையில் வசிப்பவர்கள். அங்கு இருக்கும் அகில இலங்கைத் தமிழர்கள் காங்கிரசில பிளவு ஏற்பட்டுவிட்டது. அதன் பலனாக, அங்குளள தமிழர்களுககும ஒரு சுதநதிரத் தனி அரசு வேணடுமென்ற வழககுக கிளமபுகிறது. இலங்கைத தீவோ மிகமிகச் சிறியது. அதற்குள்ளே ஒரு குட்டி அரசு! வேணடுகோள் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. கோரிக்கைத் தற்சமயம்தான் கிளமபி இருப்பதால், அதிலுள்ள நியாயாநியாயங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியவிலலை. ஐரோப்பாவிலுள்ள ஸ்விஸ் நாடுபோல ஏன், 7 லட்சம தமிழர்களுக்கெனவும் ஒரு தனி அரசு இருக்ககூடாது என்று நினைத்து இருக்கிறார்கள்போலும்! எதுப்படி இருந்தாலும உழக்குககுள்ளே கிழக்கு மேறகுப் பார்ப்பது என்று கேலி கிளமபககூடும். இதுபற்றி!

## 1000 குடும்பம் பலி!

இநதிய சாககாரின் சிக்கன இயககததின் விளைவாக, பமபாயில் உள்ள நாணய உறபததிச் சாலை ஊழியர்கள 2405 பேர்களில 1000 பேர், இம் மாதம் முதல் தேதியில இருநது விலககப்பட்டார்கள்!

# மாலை மணி

சென்னை 7—10—49 வெள்ளிக்கிழமை


## பொருட்காட்சி சாலை

பொருட்காட்சிசாலை— ஒரு நாட்டின் பெருமைக்குரிய பொழுதுபோக்குச்சாலை! அது, வெறும் பொழுதுபோக்குச் சாலையல்ல, சிந்தனையைக் கிளறுவது- சிந்தனைக்கு விருந்திடுவது - நாட்டிற்குச் சிறப்பு தருவது!

காணுதற்கரிய பழைய பதுமைகளையும்- பண்டங்களையும்- படைக்கலங்களையும்— பழக்கப்படுத்தப்பட்ட பலவேறு பொருள்களையும், ஒரு நாட்டின் நாகரிகக் கூறுபாடுகளின் சின்னங்களாகக் கொண்டுவந்து நிறுத்தி வைப்பதே பொருட்காட்சிசாலையின் பெரும் பணியாகும். பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் வாய் திறந்து பேசுவதில்லையே யொழிய, தம் தோற்றத்தைக் காண்பித்து நம்மைப் பேச வைத்து விடுகின்றன. பலவேறு துறைப்பட்ட வரலாற்றுச் சுவடிகளை எழுதும்படி அவைகள் தாம் மனிதனைத் தூண்டின; தூண்டி வருகின்றன.

பொருட் காட்சி சாலையிலுள்ள பொருள்கள் நமக்கு இறந்த காலத்தைச் சுட்டிக் காட்டி, நிகழ்காலத்தை அது கொண்டு உணரச் செய்து, எதிர்காலத்தை அவை இரண்டையும் கொண்டு வகுக்கச் சொல்லுகின்றன. எந்தஒரு பொருள் அருமையுடையதாய் ஒரு பெரிய வரலாற்றினைக் கூறத்தக்க அளவில் இருக்கிறதோ, அது பொருள்காட்சி சாலையில் இடம் பெறுவதாக அமைகிறது.

நாட்டிற்குப் பெருமையையும் புகழையையும் தரும் பொருட்காட்சி சாலைகள், உலகின் நாகரிக நாடுகள் அனைத்திலும், சிறப்புறவைத்துக் காப்பாற்றப்பட்டுவருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்திலும் ஆங்காங்கு பொருட் காட்சி சாலைகள் வைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வரப்படுகின்றன என்றாலும், அவைகளில் ஒரு சிலவே சிறப்புடையவனவாக இருந்து வருகின்றன. அந்த ஒரு சிலவற்றில் சிறந்த ஒன்றாக விளங்குவதுதான், சென்னை அரசாங்கத்தினரால் போற்றிக் காப்பாற்றப் பட்டு வரும், "சென்னை அரசாங்கப் பொருட்காட்சி சாலை" யாகும்.

இப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்துக்கே உரித்தானதாகவும், இந்திய துணைக் கண்டம் முழுவதையும் உணர்த்தி நிற்பதாகவும் அமைந்த 'தேசிய பொருட்காட்சிசாலை' ஒன்றை, டில்லியில் நிறுவ மத்திய அரசாங்கத்தினர் முயற்சி செய்து வருகிறார்கள். அந்த முயற்சி பாராட்டக் கூடியதுதான். பழைய சின்னங்கள் மிகவாக நிரம்பிக் கிடக்கும் டில்லியில், ஒரு பொருட் காட்சிசாலை இருக்க வேண்டியது அவசியமே யாகும். ஆனால் டில்லியில் அமைக்கப்போகும் "தேசிய பொருட்காட்சி சாலை", மற்ற மாகாணப் பொருட் காட்சி சாலைகளை, குறிப்பாக சென்னை மாகாணப் பொருட் காட்சி சாலையைப் பாதிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது என்பதே எமது விருப்பமாகும்.

திராவிட நாகரிகத்தின் சின்னங்களாக விளங்கும் பொருள்கள் பலவும், சென்னை பொருட் காட்சி சாலையில் குவிந்து கிடக்கின்றன. தென்னாட்டுக்கே-திராவிட நாட்டுக்கே உரிய, சிறப்பு தரும்—புகழ் பயக்கும்-வேறு எங்கும் காணமுடியாத-வேறு ஒன்று அது போன்று இல்லாத, பொருள்கள் சென்னைப் பொருட்காட்சிக்குத் தனிச் சிறப்பு தருவனவாகும். அத்தகைய சிறப்பினைச் சென்னையில் தங்கவிடாமல், டில்லிக்குத் துரத்தி அடிக்கும் முயற்சி ஏதேனும் நடைபெறுமானால், அது திராவிடத்திற்குப் பெருந் தீங்கு செய்யும் முயற்சியில் ஒன்றாகவே கொள்ளப்படும். இம்மாதிரியான தீங்கைத் திராவிட நாட்டிற்கு— தென்னாட்டிற்கு இழைத்து வருவதில், வடநாடு, பரம்பரை பரம்பரையாகக் கண்ணுங்கருத்துமாக இருந்து வருவதால்தான், நாம் இது குறித்து ஐயப்பட வேண்டியிருக்கிறது.

பொருட் காட்சிப் பொருள்களைச் சேகரிப்பதிலே முனைந்து நின்று, புதைந்தும், மறைந்தும், தனித்தும் நிற்கும் அரிய பெரிய பொருள்களைக் கண்டெடுத்துத், தேசிய பொருட்காட்சி சாலை நிறுவுவார்களேயானால், அது பற்றி மறுத்துக் கூற நாம் முற்படவில்லை. ஆனால் பல காலமாகக் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்த ஒரு பொருட்காட்சி சாலையிலிருந்து, அரிய பெரிய பொருள்களை அப்படியே எடுத்துக்கொண்டு போய் விடுவதென்றால், அது பெரிய இழவாகவே முடியும் ஒரு நாட்டிற்கு. டில்லியில் மாபெரும் பொருட்காட்சி சாலையை நிறுவது என்ற முயற்சி, இந்த நிலைக்கு இடங் கொடுக்கக்கூடும் என்று அறிந்திட்டுச் சிலர் முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். ஆகவேதான், அப்படிப்பட்ட முயற்சி —அதாவது சென்னைப் பொருட்காட்சி சாலையிலுள்ள பொருள்களை டில்லிக்குக் கடத்திச் செல்லும் முயற்சி நடைபெற ஏது ஏற்படுமானால், அதற்குச் சிறிதும் இடங் கொடுக்கக் கூடாது என்று சென்னை அரசாங்கத்தினரையும், திராவிடப் பெருங்குடி மக்களையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

சிறந்த கற்சிற்பங்களும், சிலைகளும், அரிய பல புதை பொருள்களும், வெட்டி எடுக்கப்பட்ட மட்பாண்டங்களும்; தோண்டி எடுக்கப்பட்ட ரோம நாட்டு நாணயங்களும், சோழ பல்லவ ஆட்சிக் காலத்திய பொருள்களும், இன்ன பிறவும் சென்னைப் பொருட்காட்சி சாலையைச் சிறப்புடையதாகச் செய்து நிற்கின்றன. தென்னாட்டில் கண்டெடுக்கப்பட வேண்டியவைகள்—தோண்டி எடுக்கப்பட வேண்டிய காட்சிப் பொருள்கள் எவ்வளவோ மறைந்து கிடக்கின்றன. தென்னாடு பலகாலமாகவே புறக்கணிக்கப்பட்டுவருவதால், போதுமான அளவு புதைபொருள் ஆராய்ச்சி இங்கு நடத்தப்படவில்லை. தென்னாட்டில் சிறந்து விளங்கும் சென்னை பொருட்காட்சி சாலையை விரிவு படுத்தவும், புதை பொருள் ஆராய்ச்சியை நல்ல முறையில் நடத்தவும் சென்னை அரசாங்கமும், பல்கலைக்கழகங்களும் தக்க முயற்சி எடுத்துக்கொண்டால், திராவிடத்தின் பண்பாடு மிகவும் உயர்ந்ததொன்றாக விளங்கும் என்பதில், சிறிதும் ஐயம் இல்லை!

## ஊழல்களை ஒழித்துக்கட்ட வேண்டியது யார்?

### மயிலே! மயிலே! இறகுபோடு என்று கேட்பவருண்டா?

பதுக்கி வைக்காதீர்கள்! கள்ள மார்க்கட்டில் விற்பனை செய்யாதீர்கள்! என்று அரசாங்கத்தினர் தொண்டைவரளப் பிரசாரம் செய்தனரே, பலன் என்ன வாயிற்று? இன்று முக்கியப் பதவிகள் வகித்துவருபவர்கள், சட்டசபை அங்கத்தினர் பதவி வகித்து வருபவர்கள், கதர்க்குல்லாய்க்காரர்கள், பெரிய பெரிய கொடிகளை வீடுகளில் பறக்கவிட்டுக்கொண்டிருப்பவர்கள், தேசபக்தர்கள்போல நடித்துச் சுற்றிக்கொண்டு வருபவர்கள், ஆகஸ்ட் தியாகிகள் முதலியோருள் கள்ளமார்க்கெட்காரர்கள் எத்தனை பேருளர்? கள்ளமார்க்கட்டுக்காக அபராதம் செலுத்திய பின்னரும் தேசபக்த தியாக மூர்த்திகளாகக் காங்கிரஸ் லேபிள் பெயரால் பதவிகள் பெற்றுள்ளவர்கள் இல்லையா? உத்தியோகஸ்தர்களுள் ஊழல்கள் காரணமாக உயர்நீதிமன்ற நீதிபதிகள் கண்டனத்துக்காளான- பேர்வழிகள் இன்று அரசாங்க ஊழியங்களிலும், நகரசபைஊழியங்களிலும் உயர் பதவி அளிக்கப்படவில்லையா? இவை யனைத்தும் இலஞ்ச, ஊழல் ஒழிப்புச் செயல்களா?

மதுவிலக்கு இலாக்கா அமைச்சர் தோழர் சஞ்சீவி ரெட்டி இலஞ்ச ஊழல்களை ஒழித்துக்கட்டுமாறு அரசாங்க சிப்பந்திகளை மதுரைக் கூட்டமொன்றில் நிகழ்த்திய பேச்சின் மூலம் வேண்டிக்கொள்கிறார். இத்தகைய வேண்டுகோள்கள் பயனளிக்குமா? மயிலே மயிலே இறகு கொடு என்றால்கொடுப்பதுண்டா?

உண்மையில் இலஞ்ச ஊழல் ஒழிய வேண்டுமென்றால், ஆட்சிப் பீடத்திலமர்பவர்கள் மனநிலை முதலில் மாறவேண்டும். தயை தாக்ஷண்ணியம், எதற்கும் பணியாத கோமை- நீதி ஒன்றினையே கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டும். இலஞ்சம் கேட்கும் உத்தியோகஸ்தர்களைப் பொது மக்கள் காட்டிக் கொடுத்தால், பொது மக்களின் நேரமும் காலமும், ஊக்கமும் உற்சாகமும் குன்றுமளவுக்கு அவர்களுக்குத் தொல்லை தரும் வழக்கத்தை ஒழித்து உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று அரசாங்க ஊழியராக இருப்பவர்கள், இனி வருபவர்கள், ஆகிய அனைவருடைய முன்னிலை, பொருளாதாரநிலை, செலவு விகிதம், சொத்து, மனைவி மக்கள் பேரிலுள்ள சொத்து, முதலியவற்றினைக் கணக்கெடுத்து வைத்துவிட்டு, வருடா வருடம் அதைக் கண் காணிப்பதால் எத்தனை பெரிய மனிதர்களின் இலஞ்ச ஊழல் வெளிப்படும். இவ்வாறு பழைய நிலையைக் கணக்கெடுத்துப் புதிய நிலையுடன் ஒப்பிட்டுப்பார்க்கஇறங்கினால், இன்று பெரிய மனிதர்களாகியுள்ள பலர்இலஞ்ச ஊழல், கள்ளவர்த்தகம் முதலிய ஏதேனும் ஒரு குற்றத்தில் சிக்கியே இருப்பார்கள். அரசாங்கம் துணிவுடன் முன் வந்து, மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர் கள், உத்தியோகஸ்தர்கள் ஆகிய அனைவருடைய முன் கணக்கைப் பார்க்கட்டும், விஷயம் புரிந்துவிடும். 5-ஆண்டுகளுக்கு முன் பராரிகளாயிருந்த பலர் இன்று எவ்வித உழைப்பும், வாணிகமும் இன்றியே மோட்டாரில் பவனிவரும் பெரும் பணக்காரராகியுள்ள மர்மங்கள் விளங்கும். அரசாங்கம் இவ்வாறு செய்யத் துணியுமா? இதை விடுத்து, லஞ்சத்தை ஒழியுங்கள் என்று கூறிக்கொண்டே இருந்துவிட்டால் போதுமா? மேடையில் பேசிவிட்டால் போதுமா? தக்கவாறு செயலாற்ற அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார் முன்வரட்டும். இலஞ்ச ஊழல்கள் தவிடு பொடியாகி மறையுமாறு செய்ய உள்ளுணர்ச்சியோடு வேலை செய்யட்டும்.

## அறிவிப்பு

"மாலை மணி" அலுவலகப் பணியாளர்களுக்கு ஓய்வு அளிக்கும் நலன் கருதி, "மாலை மணி" ஞாயிறு வெளியீடு (வெளியூர் திங்கள் வெளியீடு), வரும் கிழமையிலிருந்து நிறுத்தப்படுகிறது என்பதை ஏஜண்டு தோழர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்.

## பிச்சைக்காரர் நாடு!

'இந்தியாவைப் பிச்சைக்காரர் நாடு என அயல் நாடுகளில் மக்கள் கூறுவதைக் கேட்க மிகவும் வருத்தமாக இருக்கிறது. கடைத் தெருக்களில் ஏதாவது சாமான் வாங்கப் போனால் பிச்சைக்காரர் சைன்யம் வந்து சூழ்ந்து கொண்டு விடுவதாக அவர்கள் கூறுகின்றனர்.'

—சா. சி. பி.

## நிழல் கூடத்தானே!

"மலேயாவில் மொத்தம் சுமார் 7 லட்சம் இந்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 135 பேருக்குத்தான் பிரஜா உரிமைகள் உண்டு. 25,000 சீனரில் 930 பேர்களுக்குத்தான் பிரஜா உரிமைகள் உண்டு."

## அடிப்படையில் இலட்சிய ஒருமை இருக்கவேண்டும்

### அதுதான் கூட்டு சர்க்காரின் இலட்சணம்!

இப்பொழுதுள்ள பர்மா சர்க்காரில், சென்ற ஏப்ரலில் பதவியை விட்டு விலகிய பர்மிய சோஷலிஸ்டு கட்சியினர் மீண்டும், பதவி பெறுவார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது. சென்ற ஏப்ரலில் பர்மா சர்க்காரின் போக்கில், எந்தவிதக் குறைபாடு இருக்கிறது என்பதற்காக, சோஷலிஸ்டுகள் பதவியிலிருந்து விலகினார்கள்; இன்று, அன்றில்லாத எந்தப் புதுமை இருக்கிறது என்பதற்காக மறுபடியும் பதவி ஏற்கச் சம்மதிக்கிறார்கள்?

பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளிடையேயும், குறிப்பிட்ட ஒரு பொதுவான கோட்பாடு இயல்பாக இருந்தால்தான், அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு ஆட்சி செய்வது என்பது நடைமுறையில் வெற்றிபெறக்கூடியதாகும். இங்கிலாந்தில் சென்ற போர்க் காலத்தின்போது, ஜெர்மனிக்கு விரோதமாகப் போரை வெற்றிகரமாக நடத்துவதற்காக, சர்வகட்சி ஆட்சி அமைந்தது. எந்தவிதச் சிறு தகராறும் அந்தக் கட்சிகளுக்குள், அக்காலத்தில் ஏற்படவில்லை. இதுபோன்ற ஏதாவது பொதுவான குறிக்கோள், இன்று பர்மாவில் உள்ள ஆட்சியாளர்களுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் இருக்கிறதா? அப்படி ஒன்றும் சொல்லிவிட முடியாது. எப்படியாவது பதவியைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று ஆட்சியாளர்களும், பதவியில் இருந்துவிட்டால் போதுமென்று சோஷலிஸ்டுகளும் நினைத்துவிட்டதுதான், இந்தக் கூட்டு சர்க்கார் ஏற்பாடு முயற்சிக்குக் காரணமாக இருக்கக் கூடும் என்று யூகிக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த உறவும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கிறதோ பார்ப்போம்!

# மகத்தான பதவி-மாருத...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தகு ஆராய்ச்சியில் ஈடுபடுவோர், மனுவிற்கு பலியாகமாட்டார்கள். நீதி பிறந்து வளர்த்த கருத்தைக் காண்பதோடு நிற்பர் அப்பேரறிவாளர்கள். மனுவின் நீதி, இன்னும் மக்கள் மன்றம் ஏறவேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் செய்கையால் நாட்டுக்குத் தீமை எதுவும் சம்பவித்துவிட வழிகிடையாது. வரலாற்று அறிவு வளர வழி ஏற்படும். ஆச்சாரியார் புரியும் பணிக்கும், சட்ட ஆய்வாளர்களின் பணிக்கும் நேர்மாற்றம் உண்டு, வடதுருவம் தென்துருவம் என்ற முறையில்.

மாயூரத்திலே 3-10-49-ல் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர் மாநாட்டிற்கு, அனுப்பிய ஆசிச் செய்தியில் அன்பர் ஆச்சாரியார் இதனைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

**'மனுவர் கண்ட பிரம்மகுலம் ஆரம்ப ஆசிரியர்கள்'**தான் என்று மகிழ்ச்சிக்குரியதா இது? மனத்தைப் புண்படுத்தக்கூடியது—கனத்தின் பேச்சு! வேறு நாட்டிலே பிறப்பிலே பேதம் கற்பித்தவனை, பெரியவன் என்று கூறுவர்? பேயன் என்பர், பித்தன் என்பர், தூர்த்தன் என்பர், துன்மார்க்கன் என்பர், மக்கள் ஒற்றுமையைச் சிதைக்கவந்த உலுத்தன் என்பர்!

மனு வகுத்தப் பிரம்ம குலத்தால, மக்கள் சமுதாயம் அடைந்த இன்னலைத் துடைக்கவே, இவ்வளவு காலம் பிடித்தது. இத் துறையில் இன்னும் முழு வெற்றி ஏற்பட்டுவிட்டது என்று திருப்தி கொள்வதற்கில்லை. இன்று வேறு பிரம்ம குலத்தைச் சிருஷ்டிக்கிறார், தற்கால மனு! **'பிரம்ம குல தர்மத்தை மறவாமல் நடந்துகொள்வீர்களாக'** என்றும் ஆசி அளிக்கிறார், ஆச்சாரியார்! ஓதல், ஓதுவித்தல, வேட்டல், வேட்பித்தல, ஏற்றல், ஈதல ஆகிய அறு தொழில், ஆரம்ப ஆசிரியர்கள் புரியவேண்டுமென்று பணிக்கிறார், **கவர்னர் ஜெனரல்!** எவ்வளவு அருமையான, காலத்துக்கேற்றகருத்துரை பாருங்கள்!

ஆச்சாரியார் எழுதின கடிதத்தில் எழுதியுள்ள வாசகங்கள் அனைத்தும் ஒரேமாதிரியாக இருக்க, ஒரே ஒரு வாசகம் மட்டும் இடைச்செருகலாகப் புகுத்தப்பட்டு இருக்கிறது. இவ்விடைச் செருகல் பணியை அவரேதான், சொந்தக் கைகளால் செய்து இருக்கிறார். மற்ற எழுத்துக்களை வேறு ஒருவரைக் கொண்டும், ஒரு திருத்தத்தை மட்டும் தம் கையாலேயும் செய்திருக்கிறார் ஏன் இந்த நிலை ஏற்பட்டது?

**'மனுநீதியின் உண்மைப் பொருள்படி நீங்கள்தான் பிரம்ம குலம்!'** என்பதோடு முடிந்திருக்கிறது முடங்கலைத் தீட்டியவரின் கைவேலை! சந்தேகம் பிறக்கிறது ஆச்சாரியாருக்கு, எங்கே இந்த ஆசிச் செய்தி கண்டு எதிர்ப்புக் கிளம்புகிறதோ என்று!

எனவே, சொந்தக் கைத்திறத்தைக் காட்டுகிறார், கொண்டிருக்கும் மனுத் திறத்தை மறைக்க! சிறு நகாஸ் வேலை செய்து பார்க்கிறார்! சன்னப்பொடி வைக்கிறார் சாமர்த்தியமாக!

**'வெற்று நூல் பூண்டவர்களல்ல!'** என்று வாசகத்திலே, எதிர்ப்பு ஏற்படாமல் தடுக்கவும், பூணூல் மட்டும் பூண்டவர்களல்ல பிரம்ம குலம், என்று காட்டவுமானப் பண்பாடு மறைந்திருப்பதாகக் காண்கிறார் ஆச்சாரியார்; மற்றவர்கள் இவ்வாறு நம்பிக்கைக்கொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறார். ஆச்சாரியாரை, தென்னாடு அறிந்துகொண்டு அநேக காலம் ஆகிறது. இந்தச் சொல்லடுக்கு ஜால வித்தைகளால் எல்லாம், மனு உள்ளத்தை மறைத்துவிட முடியாது, கருப்புக் கண்ணாடி அணிந்து, பார்வைக் குறிப்பை மறைத்துவருவது போல!

'வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நனகுணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொருநீதி' என்றுசேர நாட்டுப்பேராசிரியர்விழிப்பை ஏற்படுத்திவிட்டபின்னர், மனுவிற்கு, மக்கள் மன்றத்தில் இடம் பிடித்துத் தருவது,-ஆச்சாரியார் முயன்றாலும்-இலகுவில் நடக்கின்ற காரியமா?

உத்தியோகம் பெரிது-உள்ளம் சிறிது சிறிது!

# அரசியல் "பிஞ்சுகள்" பற்றி "வெம்பல்" அழுகை

பம்பாயில் காந்தியடிகளின் விழாவின்போது பேசிய கே. எம். முன்ஷி, "அரசியலில் பக்குவமடையாத பிஞ்சுகளே மத்திய "மாகாண அரசாங்கங்கள் பற்றிக் குறை கூறுகின்றனா" என்று ஒப்பரி வைத்துள்ளார். அரசியல பிஞ்சுகளாவது காலக்கிரமத்தில் முற்றிப பழுக்கலாம். தோழர் முன்ஷி அரசியல் "வெம்பல்" ஆகிவிட்டாரே, முற்றிப் பழுக்காதபடி பிஞ்சிலே பழுத்தப் பழம் என்று கூறுவார்களே அதுபோல.

குறை கூறுபவர்களைக் கண்டிப்பது என்ற மனப்பான்மை இத்தகைய முன்ஷி போன்ற வெம்பல்களுக்குத்தான் ஏற்படும். குறைகள் ஏற்பட்டால் அதைக் கூறுவது மக்கள் இயற்கை. அதைக் கவனித்துத் தீர்ப்பது பொறுப்பான பதவியை ஏற்பவர் கடமை. குறைகளைக் கூற அரசியல் முற்றல்கள் தேவையில்லை. பிஞ்சாயினும் முற்றலாயினும் கூறப்படும் குறை— உண்மையில் குறைதானா என்று கவனித்துத் தீர்த்துவைப்பதே அறிஞர் கடன்; பொறுப்புணர்ந்தோர் செயல். குறை கூறுவது யார் என்பதைக் கவனிப்பது அவர்கள் வேலையன்று. இந்த அரசியல் அரிச்சுவடி அறியாத முன்ஷி, குறை கூறுபவர்களைப் பிஞ்சென்க்காய வதிலிருந்தே இவர் முற்றவேமுடியாயல பிஞ்சில் பழுத்தவெம்பல் என்பது நன்கு விளங்குகிறது.

## ஏஜெண்டுகளுக்கு

பில கிடைக்கப்பெற்றுள்ள ஏஜெண்டுகள் தங்கள் பாக்கியை 8—10—49க்குள் பணம் அனுப்பா விட்டால் கட்டாயம் பத்திரிகை நிறுத்தப்படும்.

—மானேஜர்

# இனி நடப்பவை

சென்னை—புளியம் தோப்பு:— 18வது வட்ட தி. மு. க. தோழர்கள் அனுதாபிகள் கூட்டம் 9-10-49 காலை 10 மணிக்குக் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அனைவரும் இதையே அழைப்பாகக்கொண்டு வரும்படி செயலாளர் தோழர் ம. து. நித்தியானந்தம் அழைக்கிறார்.

* * *

பொம்பூர்—செம்பியம்:—திராவிடர் இயக்க எதிர்கால வேலைத் திட்டத்தைப் பற்றியும், கழக அமைப்பைப் பற்றியும் கலந்து பேசி முடிவுசெய்ய இருப்பதால், திராவிடர் கழகப் பொது உறுப்பினர்கள் அனைவரும் 9—10—49 ஞாயிறுகாலை 10-30மணிக்குக்கழக இல்லத்தில் (8, மாதவரம், பெரிய சாலை) வந்துகூடி தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு செயலாளர் தோழர் க. சிதம்பரம் கேட்டுக்கொள்கிறார்.

* * *

பம்பாய்:—16—10—49 இரவு 8-30 மணிக்கு கொலபா ஆர்தர் அவுஸ் எண் 1. இல்லத்தில்வைத்து பம்பாய் நகர திராவிடர் முன்னேற்றககழக அமைப்புக்கூட்டம நடைபெற இருக்கிறது. அது சமயம செயலாளர், பொருள் உறுப்பினர் முதலியர்வகளைத் தேர்ந்தெடுக்கப் படவேண்டியிருப்பதால், தோழர்களனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு கூட்டத்துக்கு தவறாது வந்து சேரும்படி கேட்டுக்கொள்கிறேன். எனத் தோழர் கா. ராமநாதன் அழைக்கிறார்.

* * *

சென்னை:—முத்தியாலுப் பேட்டை இளைஞர் கழக ஆதரவில், 9—10—49 ஞயிறு காலை 10 மணிக்கு, புதுத்தெரு 94-95 ராஜ மன்னார் பள்ளியில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். தோழர் புலவர் ப. அண்ணாமலை "ஈகை" என்ற அதிகாரத்தின் முன் ஐந்து பாக்களை விளக்கிப்பேசுவார்.

* * *

மயிலாப்பூர்(சென்னை):-8-10-49 சனிக்கிழமை இரவு 8 மணிக்குத் திராவிட முன்னேற்றக கழகத்தின் (மயிலைக்கிளை) உறுப்பினர்கள் கூட்டம், மயிலை அரங்கனுதபுரம தெரு, 10-ம் எண் இல்லத்தின் மாடி மீது நடைபெறும. அவ்வமயம் துவக்க விழா குறித்தும் மற்றும சில விஷயங்கள்குறித்தும் பேச இருப்பதால் அனைவரையும் வருமாறு விளம்பர உறுப்பினர் அழைக்கிறார்.

* * *

நெல்விக்குப்பம்:—9—10—49 ஞாயிறு மாலை 5மணியளவில் ரெட்டித் தெரு 63-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் சி. இளவழகன் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெறும். திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு பற்றியும், பிற விஷயங்கள் பற்றியும் பேசப்படும். ஆகவே கழகத்தோழர்களும், ஆதரவாளர்களும, வந்து துணைபுரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

சோழவந்தான்:-8-10-49 சனிக்கிழமை காலை 10மணிக்கு 'பனகல் இல்லத்தில்' திராவிட முன்னேற்றககழக அமைப்புக் கூட்டம நடைபெறும். செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருத்தலால் இதையே அழைப்பாகக் கொண்டு அனைவரையும் வரும்படியாகத் தோழர் தா. ஆவுடையப்பன் கேட்டுக்கொள்கிறார்.

## துவக்கப்பள்ளி துவக்க விழா.

கூச்சூர் (சேலம்மாவட்டம்). அக் 2- இக்கிராமத்தில் போர்டு துவக்கப பள்ளியொன்று ஏற்படுத்தப்பட்டது தோழர். சி. துரைசாமி அவர்கள் பள்ளியைத்திறந்து வைத்துப்பேசினார் ஷ. மாவட்டக்கழக உறுப்பினர் தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நிகழ்ச்சியில கலந்துகொண்டார் எனத்தோழர் மோக்ஷா (வி எம்) அறிவிக்கிறார்.

# கழகத் தோழர்களுக்கு

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள், அந்தந்த மாவட்டத்திலிருக்கும் தி. மு. க. அமைப்புக்குழு உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக்கழகச் செயலாளர்களும, கிளைக்கழகங்கள் உருவாகாதஊர்களிலே உள்ள கழக முக்கியஸதர்களும், தேவையான அளவு இரசீது புத்தகங்களை, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைப்புக்குழு உறுப்பினரிடம பெற்றுக் கொள்ளலாம்.

இந்த எண்ணிலிருந்து இந்த எண் வரையிலும உள்ள இரசீதுகளையும, இந்தஇந்த எண்கள உள்ள புத்தகங்களையும், பெற்றுக்கொண்டோம என்று, புத்தகங்கள பெற்றுக் கொள்ளும தோழர்கள, அமைப்புக்குழு உறுப்பினரிடம எழுதிக் கொடுக்க வேண்டும்.

கிளைக கழகச் செயலாளரோ, கிளைக கழகச செயலாளரால நியமிக்கப்பட்ட ஒருவரோ, அல்லது கிளைக கழகம ஏற்படாத ஊரில கழகமுக்கியஸ்தரோ, உறுப்பினர் சேர்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டும.

தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய இரசீதைச சென்னைத் தலைமைக கழகத்திற்கும, மாவட்டக கழகத்திற்கு அனுப்ப வேண்டிய இரசீதை அந்தந்த மாவட்ட அமைப்புக்குழு உறுப்பினருக்கும, கிளைக கழகத்தில இருக்க வேண்டிய இரசீதைக கிளைக கழகத்திற்கும அனுப்பிவைக்க வேண்டும.

சந்தாவில இரண்டு அணாவைக கிளைக்கழகத்திற்கும, இரண்டு அணாவைத தலைமைக கழகத்திற்கும அனுப்பிவைக்க வேண்டும. கிளைக கழகங்கள் ஏற்பட்டு, மாவட்டக கழகங்கள முறையாக உருவாகும போது, மாவட்டக கழகங்களுக்குச் சேரவேண்டிய தொகை அவற்றிற்குஅனுப்பிவைக்கப்படும.

அந்தந்த மாவட்டங்களில அமைப்புக்குழு உறுப்பினர்களாக இருப்பவரின் முகவரிகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. அந்தந்த மாவட்டங்களைச சேர்ந்த கழகத் தோழர்கள, இரசீது புத்தகங்களை, அந்தந்த அமைப்புக்குழு உறுப்பினர்களிடம பெற்றுக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன.

என். வி. நடராசன்
செயலாளர்,
தி. மு. க. அமைப்புக்குழு

### அமைப்புக் குழு உறுப்பினர்களின் மாவட்டமும்—முகவரியும்

**சென்னை:—**
கே. கோவிந்தசாமி,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
2/45 முத்துமாரிச்செட்டித் தெரு,
மண்ணடி,
சென்னை...1.

**செங்கற்பட்டு:—**
எம. சின்னையா,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
தமிழர் உணவு விடுதி,
செங்கற்பட்டு.

**தென் ஆற்காடு:—**
ஆர். டி. பழனியப்பன,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
குறிஞ்சிப்பாடி.
(தெ. ஆ. மாவட்டம்)

**வட ஆற்காடு:—**
எம். நடேசன்,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
10, சாமிசெட்டித் தெரு,
திருப்பத்தூர் (வ. ஆ)

**சேலம்:—**
ஏ. சித்தையன்,
தி மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
வாசகசாலைத் தெரு,
செவ்வாய்ப்பேட்டை,
சேலம்.

**கோவை-நீலகிரி:—**
ஆர். வெங்கடாசலம்,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
உடுமலைப்பேட்டை.
(கோவை மாவட்டம்)

**தஞ்சை:—**
கே. கே. நீலமேகம்,
தி மு. க. அமைப்புக்குழு உறுப்பினர்,
பஞ்சக்காரத்தெரு,
கும்பகோணம்.

**திருச்சி:—**
ஜி. பராங்குசம்,
தி மு. க. அமைப்புக்குழு உறுப்பினர்,
"என் எஸ் பங்களா"
கருணாநிதி பார்க்,
திருச்சி டவுன்,
திருச்சிராப்பள்ளி.

**மதுரை:—**
எஸ. முத்து,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
அழகாடி,
மதுரை

**இராமனுதபுரம்:—**
எம. எஸ். ராமசாமி,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
புளியம்பட்டி,
அருப்புக்கோட்டை.
(இராமனுதபுரம் மாவட்டம்)

**திருநெல்வேலி:—**
கே.வி.கே. சாமி,
தி. மு. க அமைப்புக்குழு உறுப்பினர்,
தூத்துக்குடி.

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

## உறையூர்—கிளை

உறையூர், அக். 2—

இன்று காலே 9-30 மணிக்கு உறந்தை திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் பி. டி. ராஜன் பார்க்கில், தோழர். எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்படவேண்டிய அவசியத்தைப் பற்றி தோழர்கள் எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன் ஆகியவர்கள் சொற்பொழி வாற்றியபின்னர்கீழ்க் கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டு செயற்குழுவும் அமைக்கப் பட்டது.

1. உறந்தை திராவிடர் கழகம் என்றிருப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் (உறையூர்-கிளை) என்று மாற்றி அமைப்பது என இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக் கிறது.

செயலாளர்:- ஆர். சுலேமான். துணைசெயலாளர்:- எம். தங்க முத்து. நிதி உறுப்பினர்:- டி. பி. மாசிலாமணி. விளம்பர உறுப்பினர்:— எம். எஸ். இராமசந்திரன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— தி. மு. கோவிந்தராஜு, எம். மாணிக்கம், ஆர். கே. சாமி, ஆ. ரெங்கராஜன், வ. செல்வம், எம். எஸ். மணி, எஸ். மாரியப்பன், எஸ். எம். சேட் முஸ்தபா.

செயலாளர் நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் எம். எஸ். மணி எழுதுகிறார்.

* * *

## சிதம்பரம்—கிளை

சிதம்பரம், அக். 2—

இந்நகர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் இன்று மாலே 6 மணிக்கு மாரியம்மன் தெரு 3வது இல்லில் கூடியது. தி. மு. கழகம் தோற்றுவிக்கும் விவரம்பற்றித் தோழர் மு. க. சுந்தரம் பேசினர். பின்பு புதிய செயற் குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—கே. சங்கரன். துணைச்செயலாளர்:—ஆர். சக்கரவர்த்தி. பொருள் உறுப்பினர்:— மு. க. சுந்தரம், விளம்பர உறுப்பினர்:— ஆ. திருவேங்கடம.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:—என். குருசாமி, எஸ். பழனி, வ. எஸ். மகபூப்; எஸ். அனந்தன், பி. சண்முகம, இரெ. பாவாடை, ப. தி. ரெங்கசாமி, பா. கிருஷ்ண சாமி. பின்பு மெயின்ரோடு அருகில் தி. மு. கழககொடி ஏற்றப் பட்டு, தீர்மான நிறைவேற்றத் துடன் கூட்டம்முடிவுற்றது. எனத் தோழர் திருவேங்கடம (வி. உறுப் பினர்) எழுதுகிறார்.

* * *

## மாயவரம்—கிளை

மாயவரம், அக். 2—

இன்று மாலே 7 மணிக்கு மாயவரம் திராவிட முன்னேறறக் கழக அமைப்புக் கூட்டம் 'பிரபாத்' ரொட்டிகிடங்கில் நடைபெற்றது. 16-10-49ல் கழகக் கட்டிடத திறப்பு விழாவும், 17-10 49ல் கழகத் துவகக விழாவும் நடத்துவ தெனத் தீர்மானிக்கப் பட்டது.

கீழ்க்கண்ட செயற்குழுவினர் மறுதேர்தல்வரைப் பணியாற்றுவர்.

செயலாளர்:—ஜி சௌந்தராராசன். துணைச்செயலாளர்:—தீ. ப. நாதன். பொருள் உறுப்பினர்:— இரெ. இராமாநுசம், விளம்பர உறுப்பினர்:—மா. சுந்தரமூர்த்தி.

ஏனைய செயற் - குழுவினர்:— ஆர். பழனிச்சாமி, கே. அருணாசலம், வை. மாணிக்கம், எஸ். செல்வராசு, பி. எ. சுபகரன், பி. எஸ். இளங்கோ, என். இட்டப்பா, வே. ஆ. அமிர்தலிங்கம், ப. த. ராசன், இரா. கி. வேல்முருகன், என். எஸ். கணபதி, எஸ். ரெத்தினம, க. ராசகோபால், சு. பண்டரி நாதன், என். சதாசிவம், ரெ. கோ. இராசன், எ. கண்ணன், எ. சாரங்கபாணி, பி. கோவிந்தராசு, இராஜேந்திரன், தங்கசாமி. எனத் தோழர் தீ. ப. நாதன் (துணைச செயலாளர் தீட்டுகிறார்.

* * *

## ஜோலார்பேட்டை-கிளை

ஜோலார்பேட்டை, அக். 3—

இன்று மாலே 6 மணிக்கு தோழர் வி. டி. குப்புசாமி அவர்கள் இல்லத்தில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம்-ஜோலார்பேட்டை கிளை என்ற பெயரில் கழகம் அமைப்பதென முடிவு செய்யப்பட்டு, செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—வி. டி. ராமன்; துணைச செயலாளர்—வி. வி. பலராமன்; பொருள் உறுப்பினர்— வி. வையாபுரி, கே. எல். துரைசாமி. விளம்பர உறுப்பினர்—வி. டி. குப்புசாமி. ஏனைய செயறகுழு உறுப்பினர்கள்: — எஸ். இலட்சுமணன், சோட்டு சாயபு, எஸ். எ. மாணிக்கம், முனிசாமி கண்ணன், சின்னகுழந்தை, சுப்பிரமணியம், பட்டு, தாசப்பநாயுடு, வி. எம். பி. ராஜன், பொன்னுசாமி, வி. கண்ணன், சி. கே. சாமி, எம். முனுசாமி, எஸ். எம். தனபால், நடுவூர் என். ஆர். மாணிக்கம், ர. ராமதாஸ். நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

என விளம்பர உறுப்பினர் தோழர் வி. டி. குப்புசாமி எழுதுகிறார்.

* * *

## அழகிச்சிப்பட்டி-சிற்றூர்க்கிளை

அழகிசசிப்பட்டி, அக. 3—

மதுரை மாவட்டம மேலூர் தாலுக்கா, அழகிசசிப்பட்டியில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் மா. வீரணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திராவிட முன்னேறறக கழகம—அழகிசசிப்பட்டி சிற்றூர்ககிளை அமைப்பதெனத தீர்மானிககப்பட்டது. புதிய செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக் கப்பட்டது.

செயலாளர்—மு. மாணிக்கம; துணைச செயலாளர்—ஆர். கிருஷ்ணன்; நிதிஉறுப்பினர்—ஆர். எம். வி. முத்தையா; விளம்பர உறுப் பினர்—அ. சுப்பையா.

ஏனைய செயறகுழு உறுப்பினர் களும் தேர்ந்தெடுககப்பட்டனர். கூட்டம இனிது முடிவுற்றது. என விளமபர உறுப்பினா தோழர் அ. சுப்பையா அறிவிக்கிறார்.

* * *

## நம்பித்தோப்பு—கிளை

நம்பித்தோப்பு, அக். 2—

இவ்வூர் திராவிடர் கழக ஆதரவாளர்கள அனைவரும் 29-9-49 மாலை இரவு 8-30 மணிக்குத் தோழர் ஆர். முத்தையா அவர்கள் இல்லத்தில் கூடி, திராவிட முன்னேறறக கழகம—நம்பித்தோப்புக் கிளை ஒன்று அமைத்தார்கள். பின்னர் செயற்குழு தேர்ந்தெடுககப்பட்டது.

செயலாளர்—ஜி. எ. துரை; துணைச செயலாளர்—ஆர். முததையா; பிற செயறகுழு உறுப் பினர்களும் தேர்ந்தெடுககப்பட்டனர். கழகத் துவக்க விழாவை 16-10-49-ல் நடத்துவதெனத தீர்மானிக்கப்பட்டது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

## பூவிருந்தமல்லி—கிளை

பூவிருந்தமல்லி, அக். 4—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம் 2-10-49 ஞாயிறு மாலே 7-மணிக்குக் கழகத் துணைத் தலைவர் தோழர் அகஸ்டின் அவர்கள் தலைமையில் கூடிற்று. கழக முக்கியஸ்தர்களும், பிற ஆதாவாளர்களும வந்திருந்தனர். கூட்டத்தின் நோக்கம் விரித்துக் கூறப்பட்டது.

பின்னர் கழகக் கொள்கைக்கு மாறுபாடாகத் திருமணம் செய்து கொண்டதற்காகப் பெரியாரின் போக்கைக் கண்டித்தும், கழக முக்கியஸ்தர்களிடத்தில் நம்பிக்கை இல்லே என்று கூறியதற்காக தலைவரை வெறுத்தும், சென்னையில் கூடிய ஆலோசனைக் கூட்டத்தின் முடிவை வரவேற்பதாகக் கூறியும், திராவிடர் கழகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் என மாற்றி அமைப்பது என்றும் தீர்மானஙகள் நிறைவேறறப்பட்டன. புதியசெயற் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர்— மு. கந்தசாமி; துணைச் செயலாளர்— அகஸ்டீன்; நிதி உறுப்பினர்—எம். எஸ். மணி, எம். குமாரசாமி. விளம்பர உறுப் பினர்— எஸ். பாலு, வி. சின்னக் கண்ணன், ஆர். டேவிட் துரைராஜ்; டி. கோவிந்தசாமி.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:- ஜெயராமன், எம். கோபால், எம். சீனிவாசன், பி. மாரிமுத்து, கே. முனுசாமி.

உடனடியாக ஆரம்ப விழாவைக் கொண்டாட வேண்டுமென்றும், பெரியார் அவர்கள் இக்கழக ஆரம்ப விழாவிற்கு வருவதாகத் தோழர் என். வி. நடராசன், அவர்கள மூலமாய்க் கொடுக்கப்பட்ட ரூபாய் இருபதை (ரூ 20) திரும்பப் பெறுவது என்றும், திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஆங்காங்கு ஏற்றிவைப்பதெனவும் மேலும பல தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டன. என விளம்பர உறுப்பினர் டேவிட் துரைராஜன் அறிவிக்கிறார்.

* * *

## பொன்னிரை—கிளை

பொன்னிரை, அக். 4—

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னிரை திராவிடர் கழகச் செயற்குழுக்கூட்டம் 4—10—49 காலே 8 மணிக்குத் தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள்:-ச[illegible] பரிசுத்தம், இரா. சாம்பசிவம், சோ. மன்மதன், இரா. சண்முகம், தருமதுரை, குஞளன், லூர்து, ஆ. திராவிடமணி, கருணாநிதி, தெட்சிணாமூர்த்தி, ஆறுமுகம், செபாஸ்டீன்.

பெரியார் அவர்களின் திருமண ஏற்பாடும், அதன் காரணமாக அவர் கையாண்ட தன்மைகளும் ஜனநாயக முறைக்கும், கட்சியின் நலனுக்கும கேடு பயப்பதாய் இருப்பதால், அவரது தலைமையில் நம்பிக்கையில்லே என்றும், 17—9—49ல் கூடிய மாகாண செயற் கமிட்டி உறுப்பினர்களின் முடிவுக்கு ஏற்ப இன்று முதல் பொன்னிரை திராவிடர் கழகத்தை, 'திராவிட முன்னேற்றக் கழகம்—பொன்னிரை கிளை' என்று மாற்றி அமைப்பதென்றும் தீர்மானஙகள்நிறைவேற்றப்பட்டன.

பின்னர் புதிய செயற்குழுதேர்ந் தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- செபாஸ்டின்; நிதி உறுப்பினர்-இரா. சாம்பசிவம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்- மன்மதன், தருமதுரை, குஞளன், இரா. சண்முகம், லூர்து. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

## பூவாளூர்—கிளை

பூவாளூர், அக். 3—

திராவிட முன்னேற்றக கழக அமைப்புக் கூட்டம், 2 - 10 - 49 ஞாயிறு மாலே 8 மணிக்குப் பூவாளூர் பாரிவேட்டை மண்டபததில் தோழர் சி. தஙகையன் தலைமையில் கூடியது. திராவிட முன்னேறறக கழகம்-பூவாளூர் கிளை என அமைப்பது என்று முடிவுசெய்யப்பட்டது. புதிய செயறகுழு ஒன்றும தேர்ந் தெடுக்கப்பட்டது.

செயலாளர்-சி. சேது; துணைச செயலாளர்—ரெ. மாணிககநாவு; பொருள்உறுப்பினர்-சி. தஙகையன். விளம்பர உறுப்பினர்-எஸ். பரமசிவம்.

கிளைக்கழக நடைமுறை வேலைகளைப்பற்றியும், துவக்க விழா நடத்துவது பற்றியும், தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டன. தோழர் இராமசாமி நன்றி கூறக்கூட்டம் இரவு 10 மணிக்குக்கலேந்தது. என விளம்பர உறுப்பினர் தோழர் எஸ். பரமசிவம் தெரிவிக்கிறார்.

* * *

## திருநள்ளாறு—கிளை

திருநள்ளாறு, அக். 3—

28-9-49 சனிக்கிழமை காலே 9-மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் தோழர் நா. சீனிவாசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கிளைக் கழகம் அமைக்கப்பட்டுப் புதிய செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக் கப்பட்டது.

செயலாளர்:-ந. ராமசாமி; துணைச்செயலாளர்:-ப. கணபதி; பொருள் உறுப்பினர்:-நா. சீனிவாசன்; விளம்பர உறுப்பினர்:— மா. கணபதி. பிற செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

மாலே 6 மணிக்குக் கழகக் கட்டிடத்தில் கொடியேற்று விழா நடத்துவது எனவும், அக்டோபர் 16ந் தேதி கழகத் திறப்புவிழா நடத்துவது எனவும் தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டன.

அன்று மாலே 6மணிக்குக் கழகக் கட்டிடததில் கழகத் தோழர்கள் வாழ்த்தொலி எழுப்ப தோழர் ப. கணபதி கொடியேற்றுவித்தார். விழா இனிது நடந்தேறியது. மாணவர்களும, பொதுமக்களும் கலந்து கொண்டனர். எனக் கழகசசெயலாளர் அறிவிக்கிறார்.

* * *

## செண்பகராய நல்லூர்—கிளை

செண்பகராய நல்லூர், அக். 3—

1-10 49 இரவு 9 மணிககு இவ்வூர் திராவிட கழக உறுப்பினாகள கூட்டம கழகக் கட்டிடத்தில், தோழர் ஆர். வி. ராமசசந்திரன் அவர்கள தலைமையில் கூடியது. திராவிடர் கழகம் என்றிருப்பதை "திராவிட முன்னேற்றக் கழகம்-செண்பக நல்லூர் கிளை" என்று மாற்றி அமைப்பது எனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஒரு மனதாய் நிறைவேற்றப்பட்டது. இன்னும் சில தீர்மானஙகள் நிறைவேற்றப் பட்டவுடன் புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— அ. சண்முகம்; பொருள் உறுப்பினர்—வி. கே. ராமையன்; விளம்பர உறுப்பினர்— ஆர். வி. ராமச்சந்திரன்; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கே. எம். ராமமூர்த்தி; வ. மாணிக்கம்; எஸ. எம். அரஙகையன்; எம. வீரபாலன்; சி. முருகையன்; முருகு இளஙகோ.

என விளம்பர உறுப்பினர் தோழர் ஆர். வி. ராமசசந்திரன் அறிவிக்கிறார்.

* * *

## நாட்டாமங்கலம்—கிளை

நாட்டாமஙகலம் (சேலம்) அக். 4—

2—10—49 ஞாயிறு மாலே 6 மணிக்கு சேலம் மாவட்டத்தைச சேர்ந்த நாட்டாமஙகலத்தில் தோழர் அ. சுப்பிரமணி அவர்கள தலைமையில் திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக்கூட்டம் நடைபெறறது. கழகம் அமைக்கப்பட்டுப் புதிய செயற்குழு ஒன்று தேர்ந் தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—பொ. அண்ணாமலே. பொருள் உறுப்பினர்:— நா. ஜெயராமன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—ந. சுந்தரம், பொ. பழனிச்சாமி, ப. சவுண்டப்பன், கோ. நடேசன்.

எனசசெயலாளர் தோழர் பொ. அண்ணாமலே எழுதுகிறார்.

* * *

## ஆலங்குடி—கிளை

ஆலஙகுடி (திருச்சி), அக. 4—

4-10-49 செவ்வாயககிழமை காலே 10மணிக்கு சொ. முத்தையா அவர்கள் கட்டிடத்தில், தோழர்

## தோழர் எஸ். ஆர். சந்தானம்.

### உணவுப்பங்கீடு ஆய்வுக்குழுவில் உறுப்பினர்.

ஈரோடு அக். 3—

ஈரோடுநகர் மன்ற உறுப்பினரும், ஈரோடுநகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளருமானத தோழர் எஸ். ஆர் சந்தானம ஈரோடு நகர சபை உணவுப் பஙகீடு ஆய்வுக்குழுவில் ஆடவுரையாளராக மாவட்டக் கலெகடரால் நியமிக்கப்பட்டார. (ந. தி.)

## தலைமையில் நம்பிக்கையில்லே!

இராஜபாளையம், அக். 2—

இவ்வூர் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் இவ்வூர் பெரியார் சதுக்கத்தில் இன்று நடைபெற்றது. பெரியாரின் போக்கைக் கண்டித்தும், தி. கழகத்தை திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றுவது பற்றியும் தீர்மானஙகள் கொண்டுவரப்பட்டன. இதைக் கூட்டத்தலைவர் தோழர் இரா. துரைராஜன் எதிர்க்கவே, அவர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் கலைக்கப்பட்டது. எனத் தோழர் கா. திராவிடமணி (செயலாளர்) எழுதுகிறார்.

## திராவிடர் கழகத்தினர் கண்டனம்

கிலக்கோட்டை(மதுரை) செப். 25-

இன்று தோழர் மா. இரத்தினம் அவர்கள் இல்லத்தில் தோழர். இ. காத்தான் தலைமையில் இவ்வூர் திராவிடர் கழக அஙகத்தினர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தலைவர் பெரியார் தனது தள்ளாத வயதில் திருமணம் செய்து கொண்டதையும், இயக்க முக்கியஸ்தர்களின் வேண்டுகோளை அலட்சியம் செய்ததையும் கண்டித்துத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு பெரும்பான்மையான அஙகத்தினரின் ஆதரவில் நிறைவேற்றப்பட்டது. எனத் தோழர் இ. காத்தான் (தி. க. தலைவர்) அறிவிக்கிறா.

ஆ. ப. இராமசாமி அவர்களின் தலைமையில் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகம கிளை நிறுவப் பட்டு, செயற்குழு ஒன்றும தேர்ந் தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-சி. அ. சிதம்பர நடராசன்; பொருள் உறுப்பினர்:- கு. பழனிச்சாமி; விளம்பர உறுப் பினர்:-சொ. முத்தையா.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:- இராம சிதம்பரம், சி. நாராயணசாமி, கருப்பையா, சுப. மருதமுத்து, அழகிரி, எத்திராஜ், ஆ. ப. இராமசாமி, ரெ. நடராசன். என விளம்பர உறுப்பினர் தோழர் சொ. முத்தையா அவர்கள் அறிவிக்கிறார்.

* * *

## கீழ்மாரி மங்கலம்—கிளை

கீழ்மாரிமஙகலம், அக். 4—

திருச்சி மாவட்டம் லால்குடி தாலுக்கா கீழ்மாரி மஙகலத்தில் 3-10-49 திஙகள் இரவு 9 மணிக்கு எஸ். ராஜா அவர்கள் இல்லத்தில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடந்தேறியது. கழகம் அமைக்கப்பட்டு, புதிய செயற் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—என். பாலன்; துணைச்செயலாளர்:—என். ராஜூ; பொருள் உறுப்பினர்.—என். மருதை; விளம்பர உறுப்பினர்:— கே. எம். தஙகவேலு.

ஏனைய செயற்குழுஉறுப்பினர்:- பெ. சின்னையன், ப. சின்னையன், பி. சிவநாதன், எ. சிவசாமி, சாத்தாவு, கே. நடாராசன்.

பிறகு இரு தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டு தோழர் எம். சிவசாமி நன்றி கூறக் கூட்டம் 10 மணிக்கு முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் தோழர் கே. எம். தஙகவேலு எழுதுகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.